IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR
MCOP 37/2023

Deposition of RW 1 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 18.07.2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | **:** | கோவிந்தராஜ் | **Caste** | : | |
| **W/o.** | **:** | | **Calling** | : | |
| **Village** | **:** | | **Religion** | : | |
| **Taluk** | **:** | | **Age** | : | |

**முதல் விசாரணை :–**

நான் தற்போது சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக மேச்சேரி காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணையின் பேரில் குற்ற எண். 67/2023 வழக்கில் சம்மந்தப்பட்ட எழுத்துமூலமான புகார், முதல் தகவல்அறிக்கை, இறுதி அறிக்கை,மாதிரி வரைபடம், பார்வை மகசர், விபத்து வழக்கில் சம்மந்தப்பட்ட இரு வாகனங்களின் மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள், மனுதாரரின் காயச்சான்றிதழ் ஆகிய ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். புகார் **எ.ம.சா.ஆ.1,** முதல் தகவல்அறிக்கை **எ.ம.சா.ஆ.2**, இறுதி அறிக்கை **எ.ம.சா.ஆ.3**, மாதிரி வரைபடம் **எ.ம.சா.ஆ.4**, பார்வை மகசர் **எ.ம.சா.ஆ.5**, விபத்து வழக்கில் சம்மந்தப்பட்ட இரு வாகனங்களின் மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் **எ.ம.சா.ஆ.6** மற்றும் **எ.ம.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி விபத்து சம்மந்தமாக மனுதாரர் கவிதா புகார் அளித்துள்ளார். விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனம் TN 52 S 6447 Honda Activa வாகனம் ஆகும். மேற்படி புகாரினை விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன். வாகனத்தின் ஓட்டுநர் தீபக்ராஜ் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன். TN 52 S 6447 வாகனத்திற்கு விபத்து சமயத்தில் காப்பீடு இல்லை. மோட்டார் வாகன ஆய்வாளரிடம் அதற்கான அபராதம் செலுத்தி ரசீது செலுத்தியுள்ளார்கள். மனுதாரர் சென்ற வாகனமான TN 52 S 1474 வாகனத்தினுடைய பதிவு சான்றிதழ், காப்பீட்டு ஆவணம் மற்றும் ஓட்டுநர் உரிமம் இல்லாததற்காக காவல்நிலையத்தில் சிறை பிடித்து வைக்கப்பட்டது.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

TN 52 S 1474 என்ற வாகனத்தின் உரிமையாளர் குமார் என்றால் சரிதான். அவருக்கு பதிவு சான்றிதழ், காப்பீட்டு ஆவணம் மற்றும் ஓட்டுநர் உரிமம் உள்ளது என்றாலும் அதை சரிவர விசாரணை செய்யாமல் வாகனத்தை காவல் நிலையத்தில் பிடித்து வைத்துள்ளதாக அறிக்கை செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

ஒம்/–கோவிந்தராஜ்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/– R. சரவணபாபு
சார்பு நீதிபதி,
மேட்டூர்.